هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# மலக்குகளின் சிறப்புகள் 1

## வானவர்கள் ஒளியால் படைக்கப்பட்டனர்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

வானவர்கள் ஒளியால் படைக்கப்பட்டனர்.

ஜின்கள் தீப்பிழம்பால் படைக்கப்பட்டனர்.

(ஆதி மனிதர்) ஆதம், உங்களுக்கு (குர்ஆனில்) கூறப்பட்டுள்ளதைப் போன்று (களிமண்ணால்) படைக்கப்பட்டார்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 5722

# மலக்குகளின் சிறப்புகள் 2-A

## மலக்குகளின் எண்ணிக்கையை அல்லாஹ் அறிந்தவன்

அல்லாஹ்றவின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அன்றைய நாளில் நரகம் எழுபதாயிரம் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுக் கொண்டு வரப்படும். ஒவ்வொரு சங்கிலியுடனும் எழுபதாயிரம் வானவர்கள் இருந்து, இழுத்து வருவார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள்,முஸ்லிம் 5464

# மலக்குகளின் சிறப்புகள் 2-B

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

## மலக்குகளின் எண்ணிக்கையை அல்லாஹ் அறிந்தவன்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

பிறகு, 'அல்பைத்துல் மஃமூர்' எனும் (வானவர்கள் அதிகம் சஞ்சரிக்கும்) இறையில்லம் எனக்கு (அருகே கொண்டு வந்து) காட்டப்பட்டது.

நான் அதைக் குறித்து ஜிப்ரீலிடம் கேட்டேன். அவர், “இதுதான் 'அல்பைத்துல் மஃமூர்' ஆகும். இதில் ஒவ்வொரு நாளும் எழுபதாயிரம் வானவர்கள் தொழுகிறார்கள். அவர்கள் இதிலிருந்து வெளியே சென்றால் திரும்ப இங்கு வரமாட்டார்கள். அதுவே அவர்கள் கடைசியாக நுழைந்ததாகிவிடும்” என்று சொன்னார்.

அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள்,புகாரி 3207

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள் 3

## இறக்கைகளைக் கொண்டவர்களாக வானவர்கள் படைக்கப்பட்டுள்ளனர்

அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும், அவன் வானங்களையும், பூமியையும் ஆரம்பமாகப் படைத்தவன். இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்நான்கும் இறக்கைகளுடைய மலக்குகளைத் தூதர்களாக ஆக்கியவன், அவன் நாடியதை(த்தன்) படைப்பில் (பின்னும்) அதிகப்படுத்துவான், நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையோன்.

அல்குர்ஆன் 35 : 1

# மலக்குகளின் சிறப்புகள் 4

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு 600 இறக்கைகள் உண்டு

ஸிர்ரு பின் ஹுபைஷ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

“(வளைந்த) வில்லின் இருமுனை களுக்கு இடையிலான நெருக்கத்தைப் போல், அல்லது அதைவிடச் சமீபமாக (வானவர் ஜிப்ரீலுக்கும் நபிக்கும் இடையிலான நெருக்கம்) இருந்தது. பிறகு, அல்லாஹ் அவருக்கு (ஜிப்ரீலுக்கு) அறிவித்ததை எல்லாம் அவர் அவனுடைய அடியாருக்கு அறிவித்தார்” எனும் (53:9,10) வசனங்களைக் குறித்து இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் எங்களுக்குப் பின்வருமாறு தெரிவித்தார்கள்.

நபி (ﷺ) அவர்கள், (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு அறுநூறு இறக்கைகள் இருக்க (அவரது நிஜத் தோற்றத்தில்) அவரைப் பார்த்தார்கள்.

புகாரி 4856

# மலக்குகளின் சிறப்புகள் 5

## ஜிப்ரீல் (அலை) அவர்களின் பிரமாண்டமான தோற்றம்

மஸ்ரூக் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

"(நபி (ﷺ) அவர்கள் இறைவனைப் பார்க்கவில்லை என்று கூறிய) ஆயிஷா (ரலி) அவர்களிடம் நான், "(வளைந்த) வில்லின் இரு முனைகளுக்கு இடையிலான நெருக்கத்தைப் போன்று, அல்லது அதைவிடச் சமீபமாக (அவர்கள் இருவருக்கும் இடையிலான) நெருக்கம் இருந்தது. பிறகு அல்லாஹ் தன் அடியாருக்கு எதை அறிவித்தானோ அதை அறிவித்தான்" எனும் (53:9-11) வசனங்களின் பொருள் என்ன?" என்று கேட்டேன்.

அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள் "அது (வானவர்) ஜிப்ரீலை (நபியவர்கள் பார்த்ததை)யே குறிக்கிறது. ஜிப்ரீல் (அலை) அவர்கள் மனித உருவிலேயே நபி (ﷺ) அவர்களிடம் வருவார்கள். ஆனால், இம்முறை மட்டும் அடிவானத்தையே அடைத்தபடி (பிரமாண்டமான) தமது (நிஜ) உருவத்தில் வந்தார்கள் என்றார்கள்.

முஸ்லிம் 290

## வானவர்கள் மிக அழகானவர்கள்

“அப்பெண்கள் அவரை (யூஸுப் நபியைப்)ப் பார்த்ததும் (அவரழகில் மயங்கி) அவரை மிக மேன்மையாகக் கண்டார்கள். (அவர் அழகில் மெய் மறந்து) தம் கைகளையும் வெட்டிக்கொண்டனர், “அல்லாஹ்வே பெரியவன்; இவர் மனிதரே அல்லர்! இவர் மேன்மைக்குரிய ஒரு மலக்கேயன்றி வேறில்லை” என்று கூறினார்கள்.

அல்குர்ஆன் 12 : 31

## அர்ஷை சுமக்கும் வானவர்களின் பிரமாண்டம்

அல்லாஹ்வுடைய வானவர்களில் அர்ஷை சுமக்கும் ஒரு வானவரைப் பற்றிக் கூறுவதற்கு எனக்கு அனுமதி வழங்கப்பட்டது எனக் கூறிய நபி (ﷺ) அவர்கள் "அவரின் காதின் சோனைக்கும் தோளுக்குமிடையே 700 வருட தொலை தூரமாகும்" என கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள்,அபூதாவூத் 4727

# மலக்குகளின் சிறப்புகள் 8-A

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## வானவர்கள் பலமிக்கவர்கள்

عَلَّمَهُۥ شَدِيدُ ٱلْقُوَىٰ

ذُو مِرَّةٍ فَٱسْتَوَىٰ

மிக்க வல்லமையுடைவர் (ஜிப்ரீல்) அவருக்குக் கற்றுக் கொடுத்தார். (அவர்) மிக்க உறுதியானவர், பின்னர் அவர் (தம் இயற்கை உருவில்) நம் தூதர் முன் தோன்றினார்.

அல்குர்ஆன் 53 : 5,6

# மலக்குகளின் சிறப்புகள் 8-B

## வானவர்கள் பலமிக்கவர்கள்

فَلْيَدْعُ نَادِيَهُۥ سَنَدْعُ ٱلزَّبَانِيَةَ

ஆகவே, அவன் தன் சபையோரை அழைக்கட்டும்.
நாமும் நரகக் காவலாளிகளை அழைப்போம்.

عَلَيْهَا تِسْعَةَ عَشَرَ

அதன் (ஸகர் எனும் நரகத்தின்) மீது பத்தொன்பது (வானவர்கள் நியமிக்கப்பட்டு) இருக்கின்றனர்.

அல்குர்ஆன் 96: 17,18 74 : 30

هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள் 8-C

## வானவர்கள் பலமிக்கவர்கள்

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ قُوٓا۟ أَنفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا
وَقُودُهَا ٱلنَّاسُ وَٱلْحِجَارَةُ عَلَيْهَا مَلَٰٓئِكَةٌ غِلَاظٌ شِدَادٌ
لَّا يَعْصُونَ ٱللَّهَ مَآ أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ

முஃமின்களே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள், அதன் எரிபொருள் மனிதர்களும், கல்லுமேயாகும், அதில் கடுமையான பலசாலிகளான மலக்குகள் (காவல்) இருக்கின்றனர்.

அல்குர்ஆன் 66 : 6

# மலக்குகளின் சிறப்புகள் 9-A

## அல்லாஹ் நாடிய தோற்றத்தில் வானவர்கள் வருகை தருவார்கள்

அல்லாஹ் நாடிய தோற்றத்தில வானவர்கள் வருகை தருவார்கள். அவ்வாறு அவர்கள் வேறு தோற்றத்தில் வரும் போது அவர்கள் வானவர்கள்தான் என்பதை மனிதர்களால் அறிய முடியாது. எனினும் அவர்களை தங்கள் கண்களால் காண்பார்கள்.

மலக்குகளின் இயற்கைத் தோற்றத்தில் அவர்களைக் காண்பதற்குரிய சக்தியை அல்லாஹ் மனிதர்களில் தனது தூதர்களுக்கு மாத்திரம் வழங்கினான். இறைவன் நாடும் போது அந்த வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

# மலக்குகளின் சிறப்புகள் 9-B

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

**நபி இப்ராஹீம்(அலை) அவர்களிடமும், மற்றும் லூத்(அலை) அவர்களிடமும் மனித தோற்றத்தில் வானவர்கள் வருகை தந்தனர்.**

வானவர்கள் இப்ராஹீம்(அலை) அவர்களிடம் வந்த நிகழ்வு அல்குர்ஆனில் (51: 24- 28 ) வசனங்களில் இடம் பெற்றுள்ளது. வானவர்கள் உணவு, தண்ணீர் போன்ற தேவைகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதையும் இந்த வசனத்திலிருந்து அறிஞர்கள் விளக்கமாகக் கூறுகின்றனர்.

வானவர்கள் லூத்(அலை) அவர்களிடம் வந்த நிகழ்வு அல்குர்ஆனில் (11: 77-81) வசனங்களில் இடம் பெற்றுள்ளது.

வானவர்கள் கூறும் வரை வந்தவர்கள் வானவர்கள்தான் என்பதை அவர்கள் அறியவில்லை.

# மலக்குகளின் சிறப்புகள் 10

**நபிமார்கள் அல்லாத நல்லவர்களிடம் வானவர்கள் வந்துள்ளனர் என்பதற்கு சான்றாக மர்யம்(அலை) அவர்களிடம் ஜிப்ரீல்(அலை) அவர்கள் வந்ததைக் குறிப்பிடலாம்.**

அப்போது நாம் அவரிடத்தில் நம் ரூஹை (ஜிப்ரீலை) அனுப்பி வைத்தோம், (மர்யமிடம்) சரியான மனித உருவில் தோன்றினார்.

அல்குர்ஆன் 19: 17

இது மட்டுமின்றி ஸஹாபாக்கள் நபி(ﷺ) அவர்களுடன் இருக்கும் போது அன்னாரது சபைக்கு ஜிப்ரீல் (அலை) மனித உருவில் வருகை தந்தார்கள் என்பதற்கு ஹதீஸ்களில் சான்றுள்ளது.

# மலக்குகளின் சிறப்புகள் 11

**நிராகரிப்பாளர்கள் வானவர்களை அல்லாஹ்வுடைய பெண் மக்கள் என்று அபாண்டமாக பொய்யுரைத்தனர். இதற்காக இவர்களுக்கு கடும் எச்சரிக்கை அல்குர்ஆனில் வந்துள்ளது.**

அன்றியும், அர் ரஹ்மானின் அடியார்களாகிய மலக்குகளை அவர்கள் பெண்களாக ஆக்குகிறார்கள், அவர்கள், படைக்கப்பட்ட போது இவர்கள் பார்த்துக் கொண்டு இருந்தார்களா? அவர்களுடைய சாட்சியம் பதிவு செய்து வைக்கப்பட்டு, அவர்கள் கேள்வி கேட்கப்படுவார்கள்.

அல்குர்ஆன் 43:19

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள் 12-A

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### இறைச் செய்தியைக் கொண்டு வருதல்

قُلْ مَنْ كَانَ عَدُوًّا لِّجِبْرِيْلَ فَاِنَّهٗ نَزَّلَهٗ عَلٰى قَلْبِكَ بِاِذْنِ
اللّٰهِ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَهُدًى وَّبُشْرٰى لِلْمُؤْمِنِيْنَ

"(உங்களில்) எவர் ஜிப்ரீலுக்கு எதிரி" என (நபியே! யூதர்களை)க் கேட்பீராக. நிச்சயமாக அவர் இதை அல்லாஹ்வின் கட்டளைப்படியே உமது உள்ளத்தில் இறக்கி வைத்தார். இது தனக்கு முன்னுள்ள (வேதத்)தை உண்மைப்படுத்துவதாகவும், நேரான வழியை அறிவிக்கக்கூடியதாகவும், நம்பிக்கை உடையவர்களுக்கு நற்செய்தியாகவும் இருக்கிறது.

அல்குர்ஆன் 2:97

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள் 12-B

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

## இறைச் செய்தியைக் கொண்டு வருதல்

وَاِنَّهٗ لَتَنۡزِيۡلُ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۱۹۲

نَزَلَ بِهِ الرُّوۡحُ الۡاَمِيۡنُ ۱۹۳

عَلٰى قَلۡبِكَ لِتَكُوۡنَ مِنَ الۡمُنۡذِرِيۡنَ ۱۹۴

بِلِسَانٍ عَرَبِىٍّ مُّبِيۡنٍ ۱۹۵

(நபியே!) நிச்சயமாக (குர்ஆன் ஷரீஃப் என்னும்) இது அகிலத்தாரின் இறைவனால்தான் அருளப்பட்டது.

(இறை கட்டளைப் பிரகாரம்) ரூஹுல் அமீன் (நம்பிக்கைக்குரிய உயிர் என்னும் ஜிப்ரயீல்) இதை உமது உள்ளத்தில் இறக்கிவைத்தார்.

(மனிதர்களுக்கு) நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக, தெளிவான அரபி மொழியில் (இது இறக்கப்பட்டுள்ளது)

**அல்குர்ஆன் 26:192-195**

# மலக்குகளின் சிறப்புகள் 13-A

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

## மனிதன் செய்பவற்றைப் பதிவு செய்தல்

وَإِنَّ عَلَيْكُمْ لَحَٰفِظِينَ ١٠

كِرَامًا كَٰتِبِينَ ١١

يَعْلَمُونَ مَا تَفْعَلُونَ ١٢

நிச்சயமாக உங்கள் மீது காவலாளர்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றனர். அவர்கள் (வானவர்களில் உள்ள) கண்ணியமான எழுத்தாளர்கள். நீங்கள் செய்பவற்றையெல்லாம் அவர்கள் (தவறாது) அறிந்து (எழுதிக்) கொள்வார்கள்.

அல்குர்ஆன் 82:10-12

# மலக்குகளின் சிறப்புகள் 13-B

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### மனிதன் செய்பவற்றைப் பதிவு செய்தல்

إِذْ يَتَلَقَّى الْمُتَلَقِّيَانِ عَنِ الْيَمِينِ وَعَنِ الشِّمَالِ قَعِيدٌ ﴿١٧﴾

مَا يَلْفِظُ مِن قَوْلٍ إِلَّا لَدَيْهِ رَقِيبٌ عَتِيدٌ ﴿١٨﴾

வலது புறத்தில் ஒருவரும், இடது புறத்தில் ஒருவருமாக இருவர் (அவன் செய்யும் செயலைக்) குறிப்பெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.
(மனிதன்) எதைக் கூறியபோதிலும் அதை எழுதக் காத்துக் கொண்டிருக்கும் ஒருவர் அவனிடம் இல்லாமலில்லை. (அவன் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் உடனுக்குடன் பதியப்படுகிறது.)

அல்குர்ஆன் 50:17-18

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள் 14-A

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### உயிரைக் கைப்பற்றுதல்

قُلْ يَتَوَفَّىٰكُم مَّلَكُ ٱلْمَوْتِ ٱلَّذِى وُكِّلَ بِكُمْ ثُمَّ إِلَىٰ
رَبِّكُمْ تُرْجَعُونَ ﴿١١﴾

(நபியே!) கூறுவீராக: “உங்கள் மீது (உங்கள் இறைவனால்) சாட்டப்பட்டிருக்கும் "மலக்குல் மவ்த்து' (என்ற மரண வானவர்)தான் உங்கள் உயிரைக் கைப்பற்றுவார். பின்னர், உங்கள் இறைவனிடமே நீங்கள் கொண்டு வரப்படுவீர்கள்.

அல்குர்ஆன் 32:11

# மலக்குகளின் சிறப்புகள் 14-B

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### உயிரைக் கைப்பற்றுதல்

وَهُوَ الْقَاهِرُ فَوْقَ عِبَادِهِۦ وَيُرْسِلُ عَلَيْكُمْ حَفَظَةً حَتَّىٰٓ إِذَا
جَآءَ أَحَدَكُمُ الْمَوْتُ تَوَفَّتْهُ رُسُلُنَا وَهُمْ لَا يُفَرِّطُونَ ﴿٦١﴾

அவன் தன் அடியார்களை அடக்கி ஆளுகிறான், மேலும் உங்களுக்குப் பாதுகாவலர்களையும் ஏற்படுத்துகிறான். (மரண நேரம் வரும்வரை அவர்கள் உங்களை பாதுகாக்கின்றனர்,) பின்னர், உங்களில் ஒருவருக்கு மரணம் வந்தால் நமது (வானவத்) தூதர்கள் அவரை உயிர் வாங்குகின்றனர். அவர்கள் (குறித்த காலத்திற்கு முன்னரோ, பின்னரோ உயிரைக் கைப்பற்றி) ஏதும் தவறிழைப்பதில்லை.

அல்குர்ஆன் 6:61

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள் 14-C

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### உயிரைக் கைப்பற்றுதல்

فَكَيْفَ إِذَا تَوَفَّتْهُمُ الْمَلَٰٓئِكَةُ يَضْرِبُونَ وُجُوهَهُمْ وَأَدْبَٰرَهُمْ ﴿٢٧﴾ ذَٰلِكَ

بِأَنَّهُمُ اتَّبَعُوا مَآ أَسْخَطَ اللَّهَ وَكَرِهُوا رِضْوَٰنَهُۥ فَأَحْبَطَ أَعْمَٰلَهُمْ ﴿٢٨﴾

இவர்கள் (இறக்கும்போது) உயிர்களைக் கைப்பற்றும் வானவர்கள் இவர்களுடைய முகத்திலும், முதுகிலும் பலமாக அடி(ப்பார்கள். அவர்கள் அடி)க்கும்பொழுது இவர்களுடைய நிலைமை எவ்வாறிருக்கும்!

இதன் காரணமாவது: நிச்சயமாக இவர்கள் அல்லாஹ்வுக்குக் கோப மூட்டக் கூடியவற்றையே பின்பற்றி, அவனுக்குத் திருப்தித்தரக்கூடியவற்றை வெறுத்து வந்தனர். ஆதலால், இவர்களுடைய நன்மைகள் அனைத்தையும் அல்லாஹ் அழித்துவிட்டான்.

அல்குர்ஆன் 47:27-28

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள் 14-D

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### உயிரைக் கைப்பற்றுதல்

إِنَّ الَّذِينَ تَوَفَّاهُمُ الْمَلَائِكَةُ ظَالِمِي أَنفُسِهِمْ قَالُوا فِيمَ كُنتُمْ ۖ قَالُوا كُنَّا
مُسْتَضْعَفِينَ فِي الْأَرْضِ ۚ قَالُوا أَلَمْ تَكُنْ أَرْضُ اللَّهِ وَاسِعَةً فَتُهَاجِرُوا فِيهَا ۚ
فَأُولَٰئِكَ مَأْوَاهُمْ جَهَنَّمُ ۖ وَسَاءَتْ مَصِيرًا ﴿٩٧﴾

எவர்கள் (தங்கள் மார்க்கக் கட்டளையை சரிவர நிறைவேற்ற முடியாமல் நிராகரிப்பவர்களின் நாட்டில் இருந்து கொண்டு) தங்களுக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கின்றனரோ அவர்களின் உயிரை வானவர்கள் கைப்பற்றும்பொழுது (அவர்களை நோக்கி "மார்க்கக் கட்டளையை நிறைவேற்றாது) நீங்கள் எவ்வாறு இருந்தீர்கள்'' என்று கேட்பார்கள். அ(தற்க)வர்கள் "அந்தப் பூமியில் நாங்கள் சிறுபான்மையினர்களாகவே இருந்தோம்'' என்று (பதில்) கூறுவார்கள். (அதற்கு வானவர்கள்) அல்லாஹ்வுடைய பூமி விசாலமானதல்லவா? நீங்கள் (இருந்த) அவ்விடத்தை விட்டு வெளியேறி இருக்கவேண்டாமா?'' என்று கேட்பார்கள். இவர்களின் ஒதுங்குமிடம் நரகம்தான்.

அது ஒதுங்கும் இடங்களில் மிகக் கெட்டது!

அல்குர்ஆன் 4:97

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள் 15-A

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### இறைவனை துதி செய்தல்

إِنَّ الَّذِينَ عِندَ رَبِّكَ لَا يَسْتَكْبِرُونَ عَنْ عِبَادَتِهِۦ وَيُسَبِّحُونَهُۥ وَلَهُۥ يَسْجُدُونَ

எவர்கள் நிச்சயமாக உமது இறைவனிடத்தில் இருக்கிறார்களோ அவர்கள் (வானவர்கள்) இறுமாப்பு கொண்டு அவனை வணங்காதிருப்பதில்லை. எனினும் "(நீ மிகப் பரிசுத்தமானவன்; நீ மிகப் பரிசுத்தமானவன்" என்று) அவனை (எப்பொழுதும்) நினைவு செய்து கொண்டும், அவனுக்கு சிரம் பணிந்து (வணங்கிக்) கொண்டும் இருக்கின்றனர்.

அல்குர்ஆன் 7:206

# மலக்குகளின் சிறப்புகள் 15-B

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### இறைவனை துதி செய்தல்

وَلَهُۥ مَن فِى ٱلسَّمَـٰوَٰتِ وَٱلْأَرْضِ ۚ وَمَنْ عِندَهُۥ لَا
يَسْتَكْبِرُونَ عَنْ عِبَادَتِهِۦ وَلَا يَسْتَحْسِرُونَ ١٩
يُسَبِّحُونَ ٱلَّيْلَ وَٱلنَّهَارَ لَا يَفْتُرُونَ ٢٠

வானங்களிலும் பூமியிலுமுள்ள அனைத்தும் அவனுக்குரியனவே! அவனிடத்தில் இருக்கக்கூடிய (வானவர்களாயினும் சரி; அவர்களும் அவனுடைய அடியார்களே!) அவர்கள் அவனை வணங்காது பெருமை அடிக்கவும் மாட்டார்கள், சோர்வுறவும் மாட்டார்கள். அவர்கள் இரவு பகல் எந்நேரமும் இடைவிடாது அவனைப் போற்றி புகழ்ந்து துதித்துக் கொண்டே இருக்கின்றனர்.

அல்குர்ஆன் 21:19-20

# மலக்குகளின் சிறப்புகள் 15-C

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### இறைவனை துதி செய்தல்

وَتَرَى الْمَلَٰٓئِكَةَ حَآفِّينَ مِنْ حَوْلِ الْعَرْشِ يُسَبِّحُونَ بِحَمْدِ رَبِّهِمْ ۖ وَقُضِيَ بَيْنَهُم بِالْحَقِّ وَقِيلَ الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَٰلَمِينَ ﴿٧٥﴾

(நபியே! அந்நாளில்) வானவர்கள் தங்கள் இறைவனைப் புகழ்ந்து, துதி செய்தவண்ணம் "அர்ஷை" சூழ்ந்து நிற்பதை நீர் காண்பீர். அச்சமயம் அவர்களுக்கிடையில் நியாயமாகவே தீர்ப்பளிக்கப்பட்டு, "அகிலத்தார் அனைவரின் இறைவனான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் சொந்தமானது" என்று (அனைவராலும் துதி செய்து புகழ்ந்து) கூறப்படும்.

அல்குர்ஆன் 39:75

# மலக்குகளின் சிறப்புகள் 15-D

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### இறைவனை துதி செய்தல்

تَكَادُ السَّمٰوٰتُ يَتَفَطَّرْنَ مِنْ فَوْقِهِنَّ وَالْمَلٰٓـئِكَةُ يُسَبِّحُوْنَ بِحَمْدِ رَبِّهِمْ وَيَسْتَغْفِرُوْنَ لِمَنْ فِى الْاَرْضِ‌ ؕ اَلَاۤ اِنَّ اللّٰهَ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ ۝٥

(மனிதர்கள் செய்யும் பாவங்களின் காரணமாக) அவர்கள் மீது வானம் வெடித்து (விழுந்து) விடவும் கூடும். (அந்நேரத்தில்) வானவர்களும் (பயந்து) தங்கள் இறைவனைப் புகழ்ந்து துதிசெய்து, பூமியில் உள்ளவர்க(ளின் குற்றங்க)ளை மன்னிக்குமாறு கோருவார்கள். (மனிதர்கள் பாவத்திலிருந்து விலகி மன்னிப்பைக் கோரினால்) நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவன், மகா கருணையுடையவன் என்பதை (நபியே! நீர்) அறிந்து கொள்வீராக.

அல்குர்ஆன் 42:5

# மலக்குகளின் சிறப்புகள் 15-E

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### இறைவனை துதி செய்தல்

فَإِنِ اسْتَكْبَرُوا فَالَّذِينَ عِندَ رَبِّكَ يُسَبِّحُونَ لَهُ بِاللَّيْلِ وَالنَّهَارِ وَهُمْ لَا يَسْأَمُونَ

ஆகவே (நபியே!) இவர்கள் கர்வம் (கொண்டு இறைவனை வணங்காது விலகிக்) கொள்வார்களாயின், (அதனால் அவனுக்கு ஒரு நஷ்டமும் இல்லை.) உங்கள் இறைவனிடத்தில் உள்ளவர்(களாகிய வானவர்)கள் இரவும் பகலும் அவனைத் துதி செய்து புகழ்ந்துகொண்டே இருக்கின்றனர். (இதில்) அவர்கள் சோர்வடைவதே இல்லை

அல்குர்ஆன் 41:38

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### இறைவனை துதி செய்தல்

وَإِذۡ قَالَ رَبُّكَ لِلۡمَلَٰٓئِكَةِ إِنِّي جَاعِلٞ فِي ٱلۡأَرۡضِ خَلِيفَةٗۖ قَالُوٓاْ أَتَجۡعَلُ فِيهَا مَن يُفۡسِدُ فِيهَا
وَيَسۡفِكُ ٱلدِّمَآءَ وَنَحۡنُ نُسَبِّحُ بِحَمۡدِكَ وَنُقَدِّسُ لَكَۖ قَالَ إِنِّيٓ أَعۡلَمُ مَا لَا تَعۡلَمُونَ ٣٠

(நபியே!) உமது இறைவன் வானவர்களை நோக்கி “நான் பூமியில் (என்) பிரதிநிதியை (ஆதமை) நிச்சயமாக ஏற்படுத்தப் போகின்றேன்'' எனக் கூறிய சமயத்தில் (அதற்கு) அவர்கள் “(பூமியில்) விஷமம் செய்து இரத்தம் சிந்தக்கூடிய (சந்ததிகளைப் பெறும்) அவரை அதில் (உன் பிரதிநிதியாக) ஆக்குகிறாயா? நாங்களோ உன் பரிசுத்தத் தன்மையைக்கூறி உன் புகழைக்கொண்டு உன்னைப் புகழ்ந்து கொண்டிருக்கிறோம்'' என்று கூறினார்கள். அதற்கு அவன் “நீங்கள் அறியாதவற்றை எல்லாம் நிச்சயமாக நான் நன்கறிவேன்'' எனக் கூறிவிட்டான்.

அல்குர்ஆன் 2:30

هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள் 15-G

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### இறைவனை துதி செய்தல்

قَالُوْا سُبْحٰنَكَ لَا عِلْمَ لَنَآ اِلَّا مَا عَلَّمْتَنَا ؕ اِنَّكَ اَنْتَ
الْعَلِيْمُ الْحَكِيْمُ ﴿٣٢﴾

அவர்கள் (இறைவனை நோக்கி) “நீ மிகத் தூய்மையானவன். நீ எங்களுக்கு அறிவித்தவற்றைத் தவிர (வேறொன்றையும்) நாங்கள் அறியமாட்டோம். நிச்சயமாக நீதான் மிக அறிந்தவன், ஞானம் உடையவன்'' எனக் கூறினார்கள்.

அல்குர்ஆன் 2:32

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள் 16-A

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

### முஃமின்களுக்காக பிரார்த்தனை செய்தல்

ٱلَّذِينَ يَحْمِلُونَ ٱلْعَرْشَ وَمَنْ حَوْلَهُۥ يُسَبِّحُونَ بِحَمْدِ رَبِّهِمْ وَيُؤْمِنُونَ
بِهِۦ وَيَسْتَغْفِرُونَ لِلَّذِينَ ءَامَنُوا۟ ۖ رَبَّنَا وَسِعْتَ كُلَّ شَىْءٍ رَّحْمَةً وَعِلْمًا
فَٱغْفِرْ لِلَّذِينَ تَابُوا۟ وَٱتَّبَعُوا۟ سَبِيلَكَ وَقِهِمْ عَذَابَ ٱلْجَحِيمِ ٧
رَبَّنَا وَأَدْخِلْهُمْ جَنَّٰتِ عَدْنٍ ٱلَّتِى وَعَدتَّهُمْ وَمَن صَلَحَ مِنْ ءَابَآئِهِمْ
وَأَزْوَٰجِهِمْ وَذُرِّيَّٰتِهِمْ ۚ إِنَّكَ أَنتَ ٱلْعَزِيزُ ٱلْحَكِيمُ ٨
وَقِهِمُ ٱلسَّيِّـَٔاتِ ۚ وَمَن تَقِ ٱلسَّيِّـَٔاتِ يَوْمَئِذٍ فَقَدْ رَحِمْتَهُۥ ۚ وَذَٰلِكَ هُوَ
ٱلْفَوْزُ ٱلْعَظِيمُ ٩

**அல்குர்ஆன் 40:7-9**

# மலக்குகளின் சிறப்புகள் 16-B

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## மலக்குகளுக்கு சுமத்தப்பட்ட பணிகள்

## முஃமின்களுக்காக பிரார்த்தனை செய்தல்

“அர்ஷை” சுமந்து கொண்டிருப்பவர்களும், அதனைச் சுற்றி இருப்பவர்களும் தங்களிரட்சகனின் புகழைக் கொண்டு (அவனைத்) துதி செய்கிறார்கள், இன்னும், அவனை விசுவாசிக்கிறார்கள், மேலும், விசுவாசங்கொண்டோருக்காக (அவர்களின் குற்றங்களை) மன்னிக்குமாறு (அல்லாஹ்விடம்) கோருகிறார்கள், “எங்கள் இரட்சகனே! நீ (உன்னுடைய) கருணையாலும் அறிவாலும் ஒவ்வொரு பொருளையும் விசாலமாக அறிந்திருக்கின்றாய், ஆகவே, தவ்பா செய்து உன்னுடைய (நேர்) வழியைப் பின்பற்றியோருக்கும், நீ (பாவத்தை) பொறுத்தருள்வாயாக,

அவர்களை நரக வேதனையிலிருந்து நீ காத்தருள்வாயாக! “எங்கள் இரட்சகனே! நீ அவர்களுக்கு வாக்களித்திருக்கும் நிலையான சுவனபதிகளில் அவர்களையும், அவர்களுடைய மூதாதையரிலும், அவர்கள் மனைவியரிலும், அவர்களுடைய சந்ததியினரிலும் (ஈமான் கொண்டு, நற்செயல்புரிந்து) யார் நல்லோராகி விட்டாரோ அவர்களையும் புகுத்துவாயாக!

நிச்சயமாக நீயே (யாவரையும்) மிகைத்தோன், (யாவையும் அறிந்த) தீர்க்கமான அறிவுடையோன்.”

மேலும், “(சகல) தீமைகளிலிருந்தும் (அவற்றின் தண்டனையிலிருந்தும்), அவர்களைக் காப்பாயாக! அன்றைய தினம், எவரை நீ தீமைகளிலிருந்து காத்துக்கொள்கிறாயோ அவர்மீது திட்டமாக, நீ அருள் புரிந்துவிட்டாய், இன்னும், அதுவே மகத்தான வெற்றியாகும்” (என்றும் கூறுவார்கள்).

அல்குர்ஆன் 40:7-9

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள் 17

## அல்லாஹ்விற்கு ஸஜ்தா செய்யும் மலக்குகள்

**அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.**

நீங்கள் பார்க்காதவற்றை நான் பார்க்கிறேன், நீங்கள் கேட்காதவற்றை நான் கேட்கிறேன்.

வானம் (பளுவினால்) நெரிகிறது, அது நெரிவது அதற்குத் தகுதியானதே. ஏனெனில், அதில் நான்கு விரல்கள் அளவுள்ள இடத்திலும் ஒரு வானவர் தம் நெற்றியை வைத்து அல்லாஹ்வுக்கு ஸஜ்தா செய்து கொண்டே இருக்கிறார்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அறிந்தவற்றை நீங்கள் அறிந்திருந்தால், நீங்கள் குறைவாகச் சிரித்து, அதிகமாக அழுவீர்கள்

(ஹதீஸின் ஒரு பகுதி)

அறிவிப்பாளர்: அபூதர் (ரலி) அவர்கள்,இப்னுமாஜா 4190

# மலக்குகளின் சிறப்புகள் 18

## அல்லாஹ்வைத் தொழும் மலக்குகள்

'அல்பைத்துல் மஃமூர்' எனும் (வானவர்கள் அதிகம் சஞ்சரிக்கும்) இறையில்லம் எனக்கு (அருகே கொண்டு வந்து) காட்டப்பட்டது.

நான் அதைக் குறித்து ஜிப்ரீலிடம் கேட்டேன். அவர், "இதுதான் 'அல்பைத்துல் மஃமூர்' ஆகும். இதில் ஒவ்வொரு நாளும் எழுபதாயிரம் வானவர்கள் தொழுகிறார்கள். அவர்கள் இதிலிருந்து வெளியே சென்றால் திரும்ப இங்கு வரமாட்டார்கள். அதுவே அவர்கள் கடைசியாக நுழைந்ததாகிவிடும்" என்று சொன்னார்கள்.

(ஹதீஸின் ஒரு பகுதி)

அறிவிப்பாளர்: மாலிக் இப்னு ஸஃஸஆ (ரலி) அவர்கள், புகாரி 3207

# மலக்குகளின் சிறப்புகள் 19

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

## ஸலாத்தை எத்திவைக்கும் மலக்குகள்

அல்லாஹ்றவின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

எனது உம்மத்தினரின் ஸலாம்களை என்னிடம் கொண்டு வந்து சேர்ப்பதற்காக, பூமியில் சுற்றித்திரியும் மலக்குகள் அல்லாஹ்றவுக்கு இருக்கிறார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் (ரலி) அவர்கள்,ஸுனனுன் நஸாயீ 3207

## மலக்குகள் ஆமீன் கூறும் தருணங்கள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

நீங்கள் நோயாளியையோ அல்லது இறந்தவரையோ (சந்திக்கச்) சென்றால், நல்லதையே கூறுங்கள். ஏனெனில், நீங்கள் கூறுவதற்கெல்லாம் வானவர்கள் 'ஆமீன்' கூறுகிறார்கள்.

அறிவிப்பாளர்: உம்மு ஸலமா (ரலி) அவர்கள், முஸ்லிம் 919

# மலக்குகளின் சிறப்புகள் 20-B

## மலக்குகள் ஆமீன் கூறும் தருணங்கள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

ஒரு முஸ்லிம், தன் சகோதரனுக்காக அவர் இல்லாதபோது (அவர் அறியாமல்) செய்யும் துஆ பதில் அளிக்கப்படக்கூடியதாகும் (துஆ செய்யும்) அவர் தலைக்கு அருகில் நியமிக்கப்பட்ட வானவர் ஒருவர் இருப்பார். அவர் தன் சகோதரனுக்காக நன்மை வேண்டி துஆ செய்யும் போதெல்லாம், அந்த வானவர், "ஆமீன், உமக்கும் அதுபோன்றே கிடைக்கட்டும்" என்று கூறுவார்.

அறிவிப்பாளர்: அபூதர்தா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 2733

# மலக்குகளின் சிறப்புகள் 20-C

## மலக்குகள் ஆமீன் கூறும் தருணங்கள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

தொழுவிப்பவர் (இமாம்), "ஆமீன்' கூறும்போது நீங்களும் "ஆமீன்' (அவ்வாறே ஆகட்டும்) என்று கூறுங்கள்.

ஏனெனில், யார் ஆமீன் கூறு(ம் நேரமா)வது வானவர்கள் ஆமீன் கூறுகின்ற (நேரத்)துடன் ஒன்றாக அமைந்து விடுகின்றதோ அவர் அதற்கு முன்பு செய்த பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புகாரி 780

# மலக்குகளின் சிறப்புகள் 21-A

## மலக்குகளின் துஆவைப் பெறுபவர்கள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

ஒவ்வொரு நாளும் அடியார்கள் காலைப்பொழுதை அடையும்போது, இரு வானவர்கள் (வானிலிருந்து) இறங்குகின்றனர்.

அவ்விருவரில் ஒருவர், "இறைவா! (நல்வழியில்) செலவு செய்பவருக்குப் பிரதிபலன் வழங்குவாயாக!" என்று கூறுவார்.

மற்றொருவர், "இறைவா! (நல்வழியில்) செலவு செய்ய மறுப்பவருக்கு இழப்பைத் தருவாயாக!" என்று கூறுவார்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 1442

# மலக்குகளின் சிறப்புகள் 21-B

## மலக்குகளின் துஆவைப் பெறுபவர்கள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

உங்களில் ஒருவர் தாம் தொழும் இடத்தில் (கூட்டுத் தொழுகையை எதிர்பார்த்து) சிறுதுடக்கு ஏற்படாமல் காத்திருக்கும்வரை அவருக்காக வானவர்கள் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

“இறைவா! இவருக்கு மன்னிப்பு வழங்குவாயாக! இறைவா! இவருக்குக் கருணை புரிவாயாக!” என்று (வானவர்களாகிய அவர்கள் கூறுகின்றனர்).

தொழுகையானது, ஒருவரைத் தம் குடும்பத்தாரிடம் செல்ல விடாமல் தடுத்து நிறுத்தியிருக்குமானால், அவ்வாறு அவரைத் தொழுகை நிறுத்தியிருக்கும் வரை அவர் தொழுகையில் இருப்பதாகவே கருதப்படுவார்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 659

## மதீனாவைக் காக்கும் வானவர்கள்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

மஸீஹுத் தஜ்ஜாலைப் பற்றிய அச்சம் மதீனாவுக்குள் நுழையாது. அன்றைய தினம் மதீனாவுக்கு ஏழு வாசல்கள் இருக்கும் ஒவ்வொரு வாசலிலும் இரு வானவர்கள் இருப்பார்கள்.

அறிவிப்பாளர்: அபூபக்ரா (ரலி) அவர்கள், புகாரி 1879

## மதீனாவைக் காக்கும் வானவர்கள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

மதீனாவின் நுழைவாயில்களில் வானவர்கள் இருப்பர்.

மதீனாவிற்குள் (பிளேக் போன்ற) கொள்ளை நோயும் தஜ்ஜாலும் நுழையமாட்டார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 1880

# மக்காவையும், மதீனாவையும் காக்கும் வானவர்கள்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

மக்காவையும், மதீனாவையும் தவிர தஜ்ஜால் கால்வைக்காத எந்த ஊரும் இராது.

மதீனாவின் எந்தவொரு நுழைவாயில் ஆனாலும் அங்கே வானவர்கள் அணிவகுத்து நின்று அதைக் காவல் புரிந்துகொண்டு இருப்பார்கள்.

பின்னர் மதீனா, தனது குடிமக்களுடன் மூன்று முறை குலுங்கும், அப்போது ஒவ்வோர் இறைமறுப்பாளனையும் நயவஞ்சகனையும் அல்லாஹ் (மதீனாவிலிருந்து) வெளியேற்றிவிடுவான்.

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், புகாரி 1881

# அதிகமான மலக்குகள் நன்மைகளைப் பதிவு செய்கின்றனர்

நாங்கள் ஒரு நாள் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் (அவர்களைப் பின்பற்றித்) தொழுது கொண்டிருந்தோம். அவர்கள் ருகூஉவிலிருந்து தலையை உயர்த்தியபோது, 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்' எனக் கூறினார்கள். அவர்களுக்குப் பின்னாலிருந்த ஒரு மனிதர் “ரப்பனா வ ல(க்)கல் ஹம்து. ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரக்கன் ஃபீஹீ ” என்று கூறினார்.

தொழுது முடித்ததும் நபி (ஸல்) அவர்கள், “(தொழுகையில் இந்த வார்த்தைகளைச்) சொன்னவர் யார்?” என்று கேட்டார்கள்.

அந்த மனிதர், “நான்தான்” என்றார். “முப்பதுக்கும் மேற்பட்ட வானவர்கள், இதைத் தம்மில் முதலில் பதிவு செய்வது யார் என(த் தமக்கிடையே) போட்டியிட்டுக் கொள்வதை நான் கண்டேன்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ரிஃபாஆ பின் ராஃபிஉ அஸ்ஸுரக்கீ (ரலி) அவர்கள்,புகாரி 799

# மண்ணறையில் கேள்வி கேட்கும் இரு வானவர்கள்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

ஓர் அடியாரின் உடலைக் மண்ணறையில் அடக்கம் செய்துவிட்டு, அவருடைய தோழர்கள் திரும்பும் போது அவர்களின் காலணிகள் எழுப்பும் ஓசையை நிச்சயமாக அவர் (மய்யித்) செவியுறுவார்.

அதற்குள் இரண்டு வானவர்கள் அவரிடம் வந்து அவரை எழுப்பி உட்கார வைத்து, "முஹம்மத் (ஸல்) எனும் இந்த மனிதரைப் பற்றி நீ என்ன கருதிக் கொண்டிருந்தாய்?" எனக் கேட்பர்.

அதற்கு "இவர் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார் என நான் உறுதி கூறுகின்றேன்" என்பார்.

பிறகு "(நீர் கெட்டவராக இருந்திருந்தால் நரகத்தில் உமக்குக் கிடைக்கவிருந்த) தங்குமிடத்தைப் பார்ப்பீராக! (நீர் நல்லவராக இருப்பதால்) அல்லாஹ் இதற்குப் பதிலாக உமக்குச் சொர்க்கத்தில் தங்குமிடத்தை ஏற்படுத்தியுள்ளான்" என்று அவரிடம் கூறப்படும்.

**அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், புகாரி 1338**

جمعية الـدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبـر

# மலக்குகளின் சிறப்புகள்

25-A-2

## மண்ணறையில் கேள்வி கேட்கும் இரு வானவர்கள்

அப்போது அவர் அவ்விரண்டையும் ஒரே நேரத்தில் காண்பார்.

இறைமறுப்பாளராகவோ நயவஞ்சகராகவோ அவர் இருந்தால் (கேள்வி கேட்கப்பட்டதும்), “எனக்கு (ஒன்றும்) தெரியாது, மக்கள் சொல்வதையே நானும் சொல்லிக் கொண்டிருந்தேன்” என்பார்.

அப்போது அவரிடம் “நீ(யாக) எதையும் அறிந்ததுமில்லை, (குர்ஆனை) ஓதி (விளங்கி)யதுமில்லை” என்று கூறப்படும்.

பிறகு இரும்பாலான சுத்தியால் அவருடைய இரு காதுகளுக்கிடையே (பிடரியில்) ஓர் அடி கொடுக்கப்படும். அப்போது மனிதர்கள், ஜின்கள் ஆகியோரைத் தவிர, அருகிலுள்ள மற்ற அனைவருக்கும் கேட்கும் அளவுக்கு அவர் அலறுவார்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 1338

جمعية الـدعوة والإرشـاد وتوعية الجاليـات بالخبـر

# மலக்குகளின் சிறப்புகள் 25-B

## மண்ணறையில் கேள்வி கேட்கும் இரு வானவர்கள்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அடக்கஸ்தலத்தில் ஓர் இறை நம்பிக்கையாளர் (அடக்கம் செய்யப்பட்டபின்) எழுப்பி அமர வைக்கப்படுவார். (அவரிடம் இரு வானவர்கள்) கொண்டு வரப்(படுவர். கேள்வி கேட்கப்)படும்.

பிறகு (அவர்களிடத்தில்) அந்த இறை நம்பிக்கையாளர், "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய தூதர் ஆவார்கள்" என உறுதி கூறுவார்.

இதையே அல்லாஹ், "இறைநம்பிக்கை கொண்டோரை உறுதியான சொல் மூலம் இம்மை வாழ்க்கையிலும் மறுமை (வாழ்க்கை)யிலும் அல்லாஹ் நிலை கொள்ளச் செய்வான்" (அல்குர்ஆன் 14:27) எனக் குறிப்பிடுகின்றான்.

அறிவிப்பாளர்: பராஉ பின் ஆஸிப் (ரலி) அவர்கள், புகாரி 1369

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

வானவர்கள் மேகத்தில் இறங்கி, விண்ணில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள் குறித்துப் பேசிக் கொள்கிறார்கள். ஷைத்தான்கள் திருட்டுத்தனமாக (ஒளிந்திருந்து) அவற்றை ஒட்டுக்கேட்டு, ஜோதிடர்களுக்கு அவற்றை (உள்ளுதிப்பாக) அறிவித்து விடுகின்றன. ஜோதிடர்கள் அதனுடன் (அந்த உண்மையுடன்) நூறு பொய்களைத் தம் தரப்பிலிருந்து புனைந்து (சேர்த்துக்) கூறுவார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,புகாரி 3210

## பெயர்களைப் பதிவு செய்யும் வானவர்கள்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

வெள்ளிக்கிழமை வந்துவிட்டால் வானவர்கள் (ஜுமுஆ தொழுகை நடக்கும்) பள்ளிவாசலின் நுழைவாயில்களில் ஒவ்வொரு வாசலிலும் (இருந்துகொண்டு) முதன் முதலாக உள்ளே நுழைபவரையும் அடுத்தடுத்து உள்ளே நுழைபவரையும் (அவர்களின் பெயர்களை) எழுதிப் பதிவு செய்துகொண்டிருப்பார்கள்.

இமாம், சொற்பொழிவு மேடையில் (உரையாற்றுவதற்காக) அமர்ந்துவிட்டால் (பதிவு செய்யும்) ஏடுகளைச் சுருட்டி வைத்துவிட்டு (அவரது உபதேச) உரையைச் செவியுற்ற வண்ணம் வானவர்கள் (உள்ளே) வருவார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 3211

## இரு தொழுகைகளில் சந்தித்துக் கொள்ளும் வானவர்கள்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

இரவு நேரத்தில் சில வானவர்களும் பகல் நேரத்தில் சில வானவர்களும் ஒருவர் பின் ஒருவராக அடுத்தடுத்து வருகிறார்கள்.

ஃபஜ்ருடைய தொழுகையிலும் அஸருடைய தொழுகையிலும் ஒன்று சேர்கின்றார்கள். பிறகு, அல்லாஹ் அவனோ மிகவும் அறிந்தவன் அவர்களிடம், "(பூமியிலுள்ள) என் அடியார்களை எந்த நிலையில் விட்டு வந்தீர்கள்?" என்று கேட்பான்.

அதற்கு அவ்வானவர்கள், "அவர்களை உன்னைத் தொழுகின்ற நிலையில் விட்டு வந்தோம். அவர்கள் (உன்னைத்) தொழுது கொண்டிருந்த நிலையிலேயே அவர்களிடம் நாங்கள் சென்றோம்" என்று பதிலளிப்பார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 3223

## வானவர்கள் நுழையாத வீடுகள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

நாயும், (உயிரினங்களின் சிலைகள் அல்லது) உருவப் படங்களும், உள்ள வீட்டினுள் (அருள்) வானவர்கள் நுழைய மாட்டார்கள்.

அறிவிப்பாளர்: அபூதல்ஹா (ரலி) அவர்கள்,புகாரி 3225

## வானவர்களின் சாபத்தைப் பெறும் பெண்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

ஒருவர் தம் மனைவியைப் படுக்கைக்கு அழைத்து, அவள் (அவருக்கு உடன்பட) மறுத்துவிட, அதனால் அவள் மீது கோபம் கொண்டவராக அவர் இரவைக் கழித்தாரென்றால் அவளை விடியும் வரை வானவர்கள் சபித்துக் கொண்டே இருக்கின்றனர்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 3237

مدى
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மலக்குகளின் சிறப்புகள்

31

## வானவர்களின் பணிவு

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ் ஒரு விஷயத்தை வானத்தில் தீர்மானித்து விட்டால், வானவர்கள் தம் சிறகுகளை இறைக் கட்டளைக்குப் பணிந்தவர்களாக அடித்துக் கொள்வார்கள். (அல்லாஹ்வின் அந்தக் கட்டளையை) பாறையின் மீது சங்கிலியை அடிப்பதால் எழும் ஓசையைப் போல் (வானவர்கள் கேட்பார்கள்.)

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 4701

# வானவர்களின் வரிசை

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

வானவர்கள் தம் இறைவனுக்கு முன்னால் அணிவகுத்து நிற்பதைப் போன்று நீங்கள் அணிவகுத்து நில்லுங்கள் என்று (நபி(ஸல்) அவர்கள்) கூறினார்கள்.

அப்போது நாங்கள், அல்லாஹ்வின் தூதரே! வானவர்கள் தம் இறைவனுக்கு முன்னால் எப்படி அணிவகுத்து நிற்கிறார்கள்? என்று கேட்டோம்.

அதற்கு வானவர்கள் (முதலில்) முதல் வரிசையைப் பூர்த்தி செய்வார்கள், வரிசைகளில் ஒருவரோடு ஒருவர் (இடைவெளி விடாமல்) நெருக்கமாக நிற்பார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர்: ஜாபிர் பின் சமுரா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 736

## அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

## நாயும், மணியோசையும் உள்ள பயணிகளுடன் (அருள்) வானவர்கள் வரமாட்டார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 4294

## வானவர்கள் சபிக்கும் செயல்

அபுல்காசிம் முஹம்மத் (ஸல்) அவர்கள், "ஒருவர் தம் சகோதரரை நோக்கி ஆயுதத்தைக் காட்டி சைகை செய்தால், அவர் அதைக் கைவிடும் வரை அவரை வானவர்கள் சபிக்கின்றனர். அவர் உடன் பிறந்த சகோதரராய் இருந்தாலும் சரியே" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 5103

## வானவர்கள் சூழ்ந்து கொள்ளும் சபை

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

மக்கள் ஓரிடத்தில் அமர்ந்து வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்வை நினைவு கூர்ந்து போற்றிக் கொண்டிருக்கும் போது,

அவர்களை வானவர்கள் சூழ்ந்து கொள்கின்றனர்.
அவர்களை இறையருள் போர்த்திக் கொள்கிறது.

அவர்கள் மீது அமைதி இறங்குகிறது.

அவர்களைக் குறித்து அல்லாஹ் தன்னிடம் இருப்போரிடம் (பெருமையுடன்) நினைவு கூருகிறான்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 5232

## வானவர்களின் பிரமாண்டமான எண்ணிக்கை

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அன்றைய நாளில் நரகம் எழுபதாயிரம் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுக் கொண்டு வரப்படும்.

ஒவ்வொரு சங்கிலியுடனும் எழுபதாயிரம் வானவர்கள் இருந்து, இழுத்து வருவார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள்,முஸ்லிம் 5464

## வானவரைக் காணும் சேவல்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

நீங்கள் சேவல்கள் கூவுகின்ற சப்தத்தைக் கேட்டால் அல்லாஹ்விடம் அவனது அருளைக் கேளுங்கள்.

ஏனெனில், அவை வானவரைப் பார்த்திருக்கின்றன. (அதனால்தான் கூவுகின்றன.)

கழுதை கத்தும் சப்தத்தை நீங்கள் கேட்டால் ஷைத்தானிடம் இருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள். ஏனெனில், அது ஷைத்தானைப் பார்த்திருக்கிறது. (அதனால் தான் கத்துகிறது.)

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புகாரி 3303

# மலக்குகளின் சிறப்புகள் 38

## நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் (பெண்ணின்) கருப்பைக்கென ஒரு வானவரை நியமித்துள்ளான்.

(அதனுள்ளே ஆணின் விந்தணு செலுத்தப்பட்டு பரிணாம மாற்றங்கள் ஏற்படும் போது) அந்த வானவர், “என் இறைவா! (இது ஒரு துளி) விந்து. என் இறைவா! இது பற்றித் தொங்கும் கரு. என் இறைவா! இது மெல்லப்பட்ட சக்கை போன்ற) சதைத்துண்டு” என்று கூறிக் கொண்டிருப்பார்.

அதை வாழ்விக்க அல்லாஹ் விரும்பும்போது அவ்வானவர், “என் இறைவா! (இது) ஆணா, அல்லது பெண்ணா? நற்பேறு அற்றதா? நற்பேறு உடையதா? (இதன்) வாழ்வாதாரம் எவ்வளவு? (இதன்) ஆயுள் எவ்வளவு?” என்று கேட்பார்.

(அல்லாஹ்வால் இவை அனைத்தும் நிர்ணயிக்கப்பட்டு) அதன் தாயின் வயிற்றில் அது இருக்கும் போதே எழுதப்படும்.

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள்,புகாரி 318

# மலக்குகளின் சிறப்புகள் 39

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

ஓர் அடியாரை அல்லாஹ் நேசிக்கும் பொழுது (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்களை அவன் அழைத்து, “அல்லாஹ் இன்னாரை நேசிக்கிறான். ஆகவே, நீங்களும் அவரை நேசியுங்கள்” என்று கூறுவான்.

ஆகவே, அவரை ஜிப்ரீலும் நேசித்துவிட்டு விண்ணகத்தில் வசிப்பவர்களை அழைத்து, “அல்லாஹ் இன்னாரை நேசிக்கிறான். நீங்களும் அவரை நேசியுங்கள்” என்று ஜிப்ரீல் அறிவிப்பார்.

உடனே விண்ணகத்தாரும் அவரை நேசிப்பார்கள். பிறகு அவருக்குப் பூமியில் வசிப்பவர்களிடமும் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புகாரி 6040

# மலக்குகளின் சிறப்புகள் 40

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## வானவரின் பாதுகாப்பு

நீர் படுக்கைக்குச் செல்லும் போது 'ஆயத்துல் குர்ஸி'யை ஆரம்பம் முதல் கடைசி வரை ஓதுவீராக!

அவ்வாறு ஓதினால் விடியும் வரை அல்லாஹ்விடம் இருந்து உம்மைப் பாதுகாக்கின்ற (வானவர்) ஒருவர் இருந்து கொண்டே இருப்பார். ஷைத்தான் உம்மை நெருங்க மாட்டான்' என்று என்னிடம் அவன் கூறினான் எனத் தெரிவித்தேன்.

நபித்தோழர்கள் நன்மையான(தைக் கற்றுக்கொண்டு செயல்படுத்துவ)தில் பேராவல் கொண்டவர்களாக இருந்தனர் அப்போது நபி (ஸல்) அவர்கள், அவன் பெரும் பொய்யனாக இருந்தாலும் உம்மிடம் அவன் உண்மையே சொல்லி இருக்கிறான்.

(ஹதீஸின் ஒரு பகுதி)

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 2311

## மலக்குகளுக்கு தொல்லைக் கொடுக்காதீர்கள்

நபி (ஸல்) அவர்கள் "இந்தச் செடியிலிருந்து விளைகின்ற வெள்ளைப் பூண்டைச் சாப்பிட்டவர் -மற்றோர் தடவை "வெங்காயம், வெள்ளைப் பூண்டு, சீமைப் பூண்டு ஆகியவற்றைச் சாப்பிட்டவர்" - நமது பள்ளிவாசலை நெருங்க வேண்டாம்.

ஏனெனில், மனிதர்கள் எதனால் தொல்லை அடைகிறார்களோ அதனால் வானவர்களும் தொல்லை அடைகின்றனர்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள்,முஸ்லிம் 976

# மலக்குகளின் சிறப்புகள் 42-A

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ رَبَّ جِبْرَائِيلَ وَمِيكَائِيلَ وَإِسْرَافِيلَ فَاطِرَ
السَّمَوَاتِ وَالأَرْضِ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ أَنْتَ
تَحْكُمُ بَيْنَ عِبَادِكَ فِيمَا كَانُوا فِيهِ يَخْتَلِفُونَ
اهْدِنِي لِمَا اخْتُلِفَ فِيهِ مِنَ الْحَقِّ بِإِذْنِكَ إِنَّكَ
تَهْدِي مَنْ تَشَاءُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள் முஸ்லிம் 1847

# மலக்குகளின் சிறப்புகள் 42-B

அல்லாஹும்ம ரப்ப ஜிப்ராயீல, வமீகாயீல, வஇஸ்ராபீ(ف)ல, பா(ف)திரஸ் ஸமாவா(த்)தி வல் அர்ழி(ض) ஆலிமல் க(خ)ய்பி வஷ்ஷஹாததி அன்த தஹ்குமு பைன இபாதிக பீ(ف)மா கானு பீ(ف)ஹி யக்(خ)தலீபூ(ف)ன, இஹ்தினீ லிமக்(خ)துலிப(ف) பீ(ف)ஹி மினல் ஹக்கி பிஇத்னிக இன்னக தஹ்தீ மன் தஷாஉ இலா ஸி(ص)ராதிம் முஸ்தகீம்

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள் முஸ்லிம் 1847

# மலக்குகளின் சிறப்புகள் 42-C

இறைவா! (வானவர்களாகிய) ஜிப்ராயீல், மீக்காயீல், இஸ்ராஃபீல் ஆகியோரின் அதிபதியே! வானங்கள் மற்றும் பூமியை முன்மாதிரியின்றிப் படைத்தவனே! மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்தவனே! நீ உன் அடியார்களிடையே அவர்கள் கொண்டிருந்த கருத்துவேறுபாடுகள் குறித்து (மறுமையில்) தீர்ப்பு வழங்குவாய். (பிற மக்களால்) மாற்றுக் கருத்து கொள்ளப்பட்டாலும் சத்திய (மார்க்க)த்திலேயே உன் தயவால் என்னை நிலைத்திருக்கச் செய்வாயாக! நீ நாடியவர்களை நேரான வழியில் நீயே செலுத்துகிறாய்.

குறிப்பு: அபூ ஸலாம் இப்னு அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களிடம் நபியவர்கள் இரவுத் தொழுகைக்காக எழுந்தால் எதைக் கொண்டு இரவுத் தொழுகையை ஆரம்பிப்பார்கள் எனக் கேட்டார்கள். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள் இந்த துஆவைக் கொண்டு என பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள் முஸ்லிம் 1847

# மலக்குகளின் சிறப்புகள்

43

اللَّهُمَّ رَبَّ جِبْرَائِيلَ وَمِيكَائِيلَ وَرَبَّ إِسْرَافِيلَ أَعُوذُ بِكَ مِنْ حَرِّ النَّارِ وَمِنْ عَذَابِ الْقَبْرِ

அல்லாஹும்ம ரப்ப ஜிப்ராயீல வமீகாயீல வரப்ப இஸ்ராபீ(ف)ல அவூது பிக மின் ஹர்ரின்னாரி வமின் அதாபில் கப்ர்

ஜிப்ரீலின், மீகாயிலின், இஸ்ராபீ(ف)லின் இரட்சகனே! உன்னிடம் நரக வெப்பத்தின் வேதனையை விட்டும், கப்ரின் வேதனையை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,நஸாயீ 5534